**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, யூன் - 2019**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, June - 2019**

FWC

| தரம் :- 13 (2019) | அரசியல் விஞ்ஞானம் - I | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

❖ **1 தொடக்கம் 20 வரையிலான வினாக்களுக்கு சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) அரசியல் என்பது
   1. நல்லவை தீயவைகளுக்கிடையிலான வேறுபாடுகளைக் கற்றலோடு இணைந்த பொது செயற்பாடாகும்.
   2. முறைசார்ந்த நிறுவனங்களின் ஊடான கற்றலாகும்.
   3. சமூகசெயற்பாட்டாளர்களும், நிறுவனங்களும் பிரயோகிக்கும் அதிகார செயன்முறையாகும்.
   4. இன, மத, மொழி, கலாச்சார ரீதியான நல்லவை தீயவைகளைக் கற்றலாகும்.
   5. எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை எவ்வழிமுறையின் ஊடாக வேனும் அடையும் அதிகாரப் போராட்டமாகும்.

2) அரசியல் கருத்தியல் என்பது,
   1. அரசாங்கம் மக்களின் நலன்களில் கவனமெடுக்காமல் தனது ஆட்சியை தக்கவைக்க பயன்படும் கருத்துத் தொகுதி.
   2. பரந்த அரசியல் கருத்தையும் இலக்கையும் வரையறுக்காத கருத்துத் தொகுதி.
   3. சமய விழுமியங்களையும், பண்பாடுகளையும் வளர்க்கும் கருத்துக் குவிப்பு.
   4. நம்பிக்கை அல்லது புரிதலை அடிப்படையாகக்கொண்ட கருத்து குவியலாகும்.
   5. சமூகக் குழுக்கள் ஈர்க்கப்படுவதை தவிர்ப்பதற்கு துணைபுரியும் செயற்பாடு.

agaram.lk

3) அரசு தொடர்பாக
   1. பிரசைக்குரிய உறுப்புரிமை விருப்பத்துக்குரியதாகும்.
   2. மனிதர்களால் தாபிக்கப்பட்ட சக சங்கங்களில் ஓர் சங்கமாகும்.
   3. பலவந்த அதிகாரத்தை பிரயோகிப்பதற்கு சட்டரீதியான மரபுரிமையைப் பெற்றுள்ளது.
   4. நாட்டின் குறிப்பிட்ட பகுதியினரை மாத்திரம் தனது அங்கத்தவர்களாக ஏற்றுக் கொள்கின்றது.
   5. இதன் நோக்கம் ஏனைய அரசுகளிடம் தனது அதிகாரத்தை பிரயோகிப்பதாகும்.

4) அமுக்க குழுக்களானவை.
   1. ஒரு குறிப்பிட்ட தரப்பினரின் அபிலாசைகளை அடைந்து கொள்வதற்காக செயற்படும் ஒழுங்கமைக்கப்பட்ட பிரசைகள் குழு.
   2. அங்கத்துவ அட்டைகளைக் கொண்ட ஒழுங்கமைக்கப்பட்ட பிரிவாகும்.
   3. அரசுக்கு வெளியில் சுயாதீனமான பிரசைகள் தமது பொது நோக்கங்களுக்காக ஒன்றிணைந்து ஒற்றுமையாக செயற்படும் சமூக வாய்ப்பாகும்.
   4. அரசாங்கத்துடன் இணைந்து அரச கொள்கைத் தீர்மானத்துக்கு அழுத்தம் கொடுக்கிறது.
   5. பங்கீடு செய்யப்பட்ட நலன்கள், நோக்கங்கள், பெறுமானங்கள் என்பன தொடர்பாக அதிகாரத்தை பிரயோகிக்காது கூட்டு முறையில் செயற்படும் சமூகப் பகுதியாகும்.

5) நவீன தேசிய அரசு.
   1. ஆரம்ப காலத்தில் மாக்சிச பண்புகளின் அடிப்படையில் தோற்றம் பெற்றது.
   2. நாளாந்த நடவடிக்கைகளை நிறைவேற்றி கொள்வதற்காக பயன்படுத்தப்படும் நிர்வாக இயந்திரம்.

3. தேசியம், குடியுரிமை ஆகிய அரசியல் பிணைப்பின் அடிப்படையில் தாபிக்கப்பட்ட தன்னாட்சி அரசியல் சமூகமாக உள்ளது.
4. இனமத வேற்றுமைகளையும், அரசியல் ஒற்றுமையின்மையும் பாதுகாக்கும் ஓர் அரசு முறையாகும்.
5. சர்வதேச அரசியலில் இருந்து விலகி செயற்படுதல்.

6) நடத்தைவாத அணுகுமுறை பண்புகளாவன,
1. மனிதனின் அரசியல் நடத்தைகளை விடுத்து, அனுபவ ரீதியான முடிவுக்கு வருதல்.
2. பெறுமதி சாரா கற்கை முறையாக இருத்தல.
3. சமூக பொருளாதார வர்க்க மூலங்களை இனங்கண்டு அம்முழுமை தொடர்பாக ஆய்வு செய்கிறது.
4. அரசறிவியல் சாரா ஏனைய பாடங்களின் கோட்பாடுகளையும் எண்ணக்கருக்களையும் ஆய்வு செய்கிறது.
5. அரசியல் விஞ்ஞானம் தொடர்பான பெறுமானம் சார் விடயங்களை கற்பதற்கு கரிசனை காட்டுகிறது.

7) சமதர்ம வாத அரசாங்க முறை.
1. தனியார் சொத்துரிமையை ஊக்கப்படுத்தல்.
2. சொத்துமுறை தொடர்பான சமூக பொது உரிமையை வலியுறுத்தல்.
3. ஜனநாயக மூலக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டதாக அமைதல்.
4. அரசாங்கத்தில் ஒளிவு மறைவற்ற தன்மையும், ஆட்சியாளர் பொதுமக்களுக்கு பொறுப்பு கூறலும்.
5. பொருளாதாரமானது கேள்வி நிரம்பலும், சந்தை சக்திகளாலும் நிர்ணயிக்கப்பட்டிருத்தல்.

8) குடியரசு வாதம்
1. இறைமை உரிமையாளன், ஆட்சியாளன் அன்றி பொதுமக்களாவார்.
2. 20 ஆம் நூற்றாண்டு காலத்தில் பாசிசவாதத்திற்கு சமாந்தரமாக வளர்ச்சியடைந்தது.
3. முதலாளி அரசை வீழ்த்தி தொழிலாளர் வர்க்கத்தினால் அரச அதிகாரத்தை கைப்பற்றிக் கொள்கிறது.
4. இதன் முன்னோடிகளாக தோமஸ் ஹொப்ஸ், ஜோன் லொக், மொண்டஸ்கியூ போன்றவர்களாவார்.
5. ஒரு நாட்டின் குறிப்பிட்ட பிரசைகளின் நலனுக்காகவே பிரசைகள் சமூகமாக ஒழுங்கமைக்கப்படுகிறது என்கின்றது.

9) பெண்ணியல் வாதம்
1. அரசியல் கருத்தியல்களில் ஒன்றாக 1990 காலப் பகுதியில் ஆரம்பமானது.
2. ஆசிய நாடுகளிலேயே முதலில் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்து வருகிறது.
3. பெண்ணியல் வாதத்தின் அடிப்படை தந்தை வழி தலைமைத்துவத்தை முற்றாக நீக்குதலேயாகும்.
4. ஆண்களுக்கு நிகராக பெண்கள் சமூக பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக சமஉரிமையை வலியுறுத்துகிறது.
5. அரசு தொடர்பான பெண்ணியல் வாத கோட்பாடு அரசியலில் உலகளாவிய ரீதியில் வலுவானதாக காணப்படுகின்றது.

10) நாடொன்றின் அனைத்தான்மை ஆட்சி தோன்றுவதற்கு காரணமாக அமைவது,
1. போட்டிக் கட்சி முறை
2. பெரும்பான்மையினர் கருத்தை மாத்திரம் ஏற்றுக் கொள்ளல்.
3. சட்டத்தின் ஆட்சி
4. அரசியல் அறிவு பெற்ற மக்கள்
5. யாப்புறுவாதம்.

agaram.lk

11) முரண்பாட்டு அணுகுமுறையாக கருதப்படுவது,
1. முரண்பாடு தவிர்த்தல்
2. முரண்பாட்டு முகாமை
3. முரண்பாடு முன்னெச்சரிக்கை செய்தல்
4. சமாதான உடன்படிக்கை
5. முரண்பாட்டு நிலைமாற்றம்

12) பொதுக் கொள்கை என்பது,
1. பொதுமக்களின் கவனத்திற்குட்பட்ட பிரச்சினை ஒன்றை தீர்த்துக் கொள்ள சர்வ அதிகாரம் மிக்க செயற்பாட்டாளர் அறிவு பூர்வமாக முன் எடுக்கும் செயற்பாடு.
2. தமது உற்பத்தியை அதிகரித்துக் கொள்ள ஓர் அரச கூட்டுத் தாபனத்தால் வகுக்கப்படும் திட்டமாகும்.
3. தேர்தல் வெற்றியை இலக்காக கொண்டு அரசியல் கட்சிகள் முன்வைக்கும் கொள்கை திட்டமாகும்.
4. தனிப்பட்ட நலன்களை மேம்படுத்திக் கொள்ள ஒரு குழுவால் முன்வைக்கும் கொள்கை திட்டமாகும்.
5. வர்த்தக சங்கத்தினர் தமது உற்பத்தியை மேம்படுத்திக் கொள்ள முன்னெடுக்கும் செயற்திட்டமாகும்.

13) சமஷ்டி அரசியலமைப்பு தொடர்பாக,
1. மத்தியில் உள்ள நிறைவேற்றுத்துறை, சட்டத்துறை, நீதித்துறை அதிகாரங்கள் தனி முதன்மையானவையாக இருத்தல்.
2. வேறுபாடுகளுக்கும் ஐக்கியத்துக்கும் இடையிலான தொடர்பு வெளிப்படும்.
3. சர்வ அதிகாரத்துவ ஆட்சி தோன்றுவதற்கான வாய்ப்பு உயர்மட்டத்தில் காணப்படும்.
4. அரசாங்கப் பொறிமுறை எளிமையானதாகவும் நெகிழ்ச்சியானதாகவும் இருக்கும்.
5. ஒன்றாக இணைந்த நிறுவனங்களைக் கொண்ட ஓர் அரசாங்கம் மட்டும் நிலவுதல்.

14) ஜனாதிபதி அரசியலமைப்பு
1. நிறைவேற்றுத்துறைக்கும் சட்டத்துறைக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படல்.
2. அரசாங்க கட்டமைப்பில் சட்டத்துறைக்கு பிரதான கேந்திர இடம் வழங்கப்பட்டிருத்தல்.
3. நிறைவேற்று மற்றும் சட்டத்துறைகள் தனித்தனியே தெரிவு செய்யப்படுவதோடு அவற்றுக்கு தனித்தனியே யாப்பு ரீதியான சுயாதீனமான அதிகாரங்களும் காணப்படுகின்றது.
4. தனி நபர்களின் கைகளில் அரச அதிகாரம் குவிந்துள்ளதோடு மக்களதிகாரத்திற்கு கட்டுப்படாதவராக இருத்தல்.
5. பாராளுமன்றத்தின் ஒத்துழைப்பின் அடிப்படையில் அரசாங்கம் நிலைத்திருக்கும்.

agaram.lk

15) தற்கால பிரித்தானிய அரசியலமைப்பு தொடர்பாக
1. அமைச்சுக்கள் அனைவரும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை மாத்திரம் கொண்டிருத்தல்.
2. ஒற்றையாட்சி சமஷ்டி ஆட்சி என்ற எந்தவொரு மாதிரிக்கும் உட்படவில்லை.
3. பிரித்தானிய பிரதமர் கட்டாயம் பொதுமக்கள் சபை உறுப்பினரிலிருந்தே தெரிவு செய்யப்பட வேண்டும் என யாப்பு கூறுகின்றது.
4. சட்டத்துறை புனராய்வு செய்யும் அதிகாரம் நீதிமன்றுக்கு காணப்படுகிறது.
5. மசோதாக்களும் கையொப்பமிட்டு சட்டமாக்குபவர் சபாநாயகராகும்.

16) காலனித்துவ ஆட்சி தொடர்பாக
1. உள்ளூர் வர்க்கங்களுக்கிடையிலான முரண்பாடுகளை இல்லாதொழித்தது.
2. குடிமக்களின் அபிலாசைகளை பிரதிநிதித்துவப்படுத்தல்.
3. பொது நிர்வாகம், பொலிஸ், இராணுவம், நீதிமன்றம், சிறைச்சாலை போன்ற ஒழுங்கு முறை இயந்திரங்களை கொண்டு சமாதானத்தை ஏற்படுத்தல்.
4. தனது நோக்கங்களுக்காக குடியேற்றத்தின், சமூக, பொருளாதார, கலாச்சார அரசியல் நிறுவனங்களை மாற்றியமைக்க முற்படல்.
5. குடியேற்ற நாட்டின் பொருளாதார, சமூக, கலாச்சார அரசியல் நலன்களை வழிப்படுத்தல்.

17) பிரித்தானிய காலணித்துவ ஆட்சியின் கீழ்
1. பிரித்தானிய மதப் பிரச்சாரர்களை வரவழைத்தமை.
2. பிரிவேனாக் கல்வி அறிமுகமானவை.
3. மரபுசார் சேவை முறைமையும் சொத்துக்கான உரித்தும் தொடர்ந்து பேணப்பட்டது.
4. கிராமிய சீவனோபாயப் பொருளாதாரம் வளர்ச்சிடைந்தது.
5. நலன்புரி அரசுமுறை வளர்ச்சியடைந்தது.

18) கோல்புறூக்கமரன் சீர்திருத்தம் தொடர்பாக
1. அரசின் வர்த்தக ஏகபோக உரிமையை இல்லாதொழித்தது.
2. வெளிநாட்டவர்களுக்கு விசேட நீதிச் செயன்முறையை வழங்குவதை எதிர்பார்த்தது.
3. உத்தியோகப் பற்றற்ற உறுப்பினர்களைப் பெரும் பான்மையாக கொண்டிருந்தது.
4. தேசாதிபதி ஆலோசனை வழங்கவென மந்திரிசபை ஒன்று தாபிக்கப்பட்டது.
5. சட்ட நிருபன சபைக்கு சட்ட நிர்வாக சபை பொறுப்புக் கூறியது.

19) 1972 மனிங் அரசியலமைப்பு
1. 21 உறுப்பினர்களைக் கொண்ட சட்ட சபையை கொண்டிருந்தது.
2. மாகாண ரீதியான பிரதிநிதித்துவத்துக்கு வழிகோலியது.
3. இனவாரி பிரதிநிதித்துவத்தை ஒழித்தது.
4. சட்ட மன்றில் உத்தியோக பற்றற்ற உறுப்பினர் எண்ணிக்கை குறைந்தது.
5. தேசாதிபதியின் அதிகாரம் அதிகரிக்கப்பட்டது.

20) டொனமூர் அரசியல் யாப்பு தொடர்பாக
1. தேசாதிபதியின் அதிகாரம் நாம நிறைவேற்று நிலைக்கு இறங்கியது.
2. ஏழு நிறைவேற்று குழு உறுப்பினர்களும் அரசாங்க சபையில் சகல உறுப்பினர்களையும் உள்ளடக்கியிருந்தது.
3. அரசு கழகம் என கூறப்படும் 61 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு புதிய சட்டமன்றம் ஒன்று தாபிக்கப்பட்டது.
4. பிரித்தானிய அரசாங்கம் இலங்கையுடன் வைத்திருந்த யாப்பு சார் தொடர்புகளை கைவிட்டது.
5. இலங்கைப் பிரிதிநிகளுக்கு அனைத்து சட்டவாக்க அதிகாரங்களும் ஒப்படைக்கப்பட்டன.

❖ **21 தொடக்கம் 25 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட கூற்றுக்களில் சரியான கூற்றினை அல்லது சரியான கூற்றுத் தொகுதியை தெரிவு செய்க.**

agaram.lk

21) சோல்பரி அரசியல் யாப்பு சட்டத்துறை.
A. சம அதிகாரம் கொண்ட இருமன்ற சட்டத்துறை.
B. பாராளுமன்றம் என்ற சிறப்பு பெயரால் அழைக்கப்பட்டது.
C. மந்திரி சபை அரசாங்க முறையை அறிமுகம் செய்தது.
D. சட்ட வாக்கத்தில் பூரண இறைமை வழங்கியது.
E. நியமன உறுப்பினர்கள் 6 பேரை சேர்த்துக் கொண்டது.

1. ABC 2. ABD 3. BCE 4. ABCD 5. BCDE

22) 1972 ஆம் ஆண்டின் முதலாம் குடியரசு யாப்பு.
A. சிவில் சேவையையும், நீதித்துறையையும் அரசியல் நிறைவேற்றுத் துறையின் கட்டுப்பாட்டுக்குள் உட்படுத்தியது.
B. நாட்டில் வாழும் சகல இந்திய தமிழருக்கும் குடியுரிமை வழங்கியது.
C. அரசாங்கத்தில் பிரித்தானிய இராணியாரின் தலைமைத்துவத்தை தொடர்ந்து பேணியது.
D. இலங்கை சுதந்திரமும் இறைமையும் தன்னாதிக்கமும் கொண்ட குடியரசாக பிரகடனப் படுத்தியது.
E. தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட இருவகை உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

1. A மற்றும் B 2. B மற்றும் C 3. A மற்றும் D
4. AB மற்றும் E 5. AC மற்றும் E

23) 1978 ஆண்டு யாப்பின் பிரகாரம் ஜனாதிபதி.

A. மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்படுகின்றார்.
B. அரசின் தலைவராக மட்டும் செயற்படுவார்.
C. அமெரிக்க மற்றும் பிரான்சிய மாதிரிகளைப் போன்று காணப்படுவார்.
D. பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படும் குற்றப் பிரேரனை ஒன்றின் மூலம் பதவி நீக்கப்படலாம்.
E. ஆறுவருடப் பதவிக்காக இரு தடவை பதவி வகிக்கலாம்.

1. AC மற்றும் D 2. B மற்றும் C 3. BC மற்றும் D
4. AB மற்றும் E 5. ACD மற்றும் E

24) இலங்கையின் வெளியுறவு கொள்கையானது.

A. 2015 இன பின் பொருளாதார இராஜதந்திரம் தொடர்பாக வெளிநாட்டுக் கொள்கையின் மையமாக மாறியுள்ளது.
B. தற்போதைய அரசாங்கம் இந்தியாவின் பால் அதிவிசேட கரிசனையுடன் செயற்படல்.
C. பல்கலாச்சார நாடாக இருப்பதால் சமூகம் மற்றும் கலாச்சார சாதனங்கள் வெளிநாட்டு கொள்கையின் இயல்பை தீர்மானிப்பதில் செல்வாக்கு செலுத்துகிறது.
D. 1977 க்கு பின்னர் மூடிய பொருளாதார கொள்கை 2015 இன் பின்னரே மாற்றம் ஏற்பட்டது.
E. ஆதிக்க வாதத்துடன் உருவாக்குகின்ற பார்வைகளும் வெளிநாட்டுக் கொள்கையின் இயல்பை தீர்மானிக்கின்றது.

1. ABCD 2. BCDE 3. ACDE 4. ABDE 5. ABCE

25) பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கம்.

A. 1985 டிசம்பர் 08 இல் ஏழு தென்னாசிய நாடுகளும் தாபிக்கப்பட்டது.
B. உயர் தீர்மானம் எடுக்கும் அமைப்பான உச்ச மகாநாடு வருடம் தோறும் நடைபெறுகிறது.
C. தற்கால உலகில் பரந்த நோக்கைக் கொண்ட அரச சார்பு நிறுவனம்.
D. சர்வதேச சமூகத்தினரால் வறியோர் அமைப்பு என வர்ணிக்கப்படுகிறது.
E. கம்யூனிச எதிர்ப்பு பிரதான பண்பாகும்.

1. A மட்டும் 2. AB மற்றும் D 3. AD மற்றும் E
4. AB மற்றும் E 5. AE மற்றும் C

agaram.lk

❖ **26 தொடக்கம் 30 வரையான ஒவ்வொரு வினா தொடர்பாக இரு கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன ஒவ்வொரு வினாவுக்குமுரிய சோடிக் கூற்றுக்குப் பின்வரும் அட்டவணை I இற்கான வழிகாட்டியினுள்ள 1,2,3,4,5 என்பவற்றுள் எந்த இலக்கம் அதிகம் பொருந்துகிறது என்பதை தெரிவு செய்து அவ்விலக்கத்தை அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக.**

| இலக்கியம் | கூற்று I | கூற்று II |
|---|---|---|
| 1 | உண்மை | உண்மை |
| 2 | உண்மை | பொய் |
| 3 | பொய் | உண்மை |
| 4 | பொய் | பொய் |
| 5 | உண்மை | உண்மையாக இருப்பதோடு முதல் கூற்றை மேலும் பெரிதாக்கிறது |

| | கூற்று I | கூற்று II |
|---|---|---|
| 26) | இலங்கை அரசியல் கட்சி முறையில் பிரதான இரு கட்சி ஆதிக்க முடையவையாகவிருக்கும். | இலங்கை சுதந்திரம் அடைந்ததிலிருந்து இனறு வரை வந்த அரசாங்கங்கள் தனித்து ஆசட்சி அமைக்கவில்லை. (…………..) |
| 27) | மாகாணசபை துணைநிலைச் சட்டங்களை உருவாக்கும் அதிகாரத்தை பெறுகின்றன. | மாகாண சபையின் சட்ட அதிகாரத்தில் பாராளுமன்றம் தலையிடும் அதிகாரம் யாப்பின் மூலம் வழங்கப்படவில்லை. (………….) |
| 28) | 17ம் திருத்தத்தின் படி பொலிஸ் சேவை மற்றும் அனைத்து சேவையிலும் சகல துறைகளிலும் சுயாதீனமற்ற தன்மையைக் கொண்டு இருந்தது. | அரச உயர் அதிகாரிகளை நியமிக்கும் போது ஜனாதிபதி தனித்து அதிகாரத்தை பிரயோகிக்காது விடும் பொருட்டு 17ம் திருத்தின் படி அரசியலமைப்புப் பேரவை தாபிக்கப்பட்டது. (………….) |
| 29) | 18ம் திருத்ததின்படி ஜனாதிபதியின் பதவி வகிப்பு தடவைகள் வரையறுக்கப்பட வில்லை. | 19ம் திருத்தத்தின் படி பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 5 வருடமாக மாற்றப்பட்டது. (………….) |
| 30) | இலங்கையில் பாராளுமன்றக்கு உறுப்பினர்கள் விகிதாசார பிரதிநித்துவ பட்டியல் முறை மூலம் தெரிவு செய்யப் படுவர். | அதன்படி ஒரு பகுதியினர் நியமனமும் செய்யப்படுகின்றனர். (………….) |

## பகுதி B

❖ **20 குறுவினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலே விடை எழுதுக.**

31) தற்காலத்தில் அரசு மற்றும் பிரசைகளுக்கிடையிலான தொடர்பில் மிக முக்கியமான பண்புகள் இரண்டு காணப்படுகின்றன. அவ்விரு விடயத்தையும் குறிப்பிடுக.

1. …………………………………………………………………………………………………….

2. ……………………………………………………………………………………………………

32) “சிவில் அரசாங்கத்தின் இரண்டு ஒப்பந்தங்கள்” “தேசங்களின் செல்வம்” ஆகிய இரண்டு நூல்களின் ஆசிரியர்களை குறிப்பிடுக.

1. …………………………………………………………………………………………………….

2. ……………………………………………………………………………………………………

33) “தனிநபர் கைகளில் அரச அதிகாரம் திகழ்வதும் அவ்வதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதில் எல்லைகளோ கட்டுப்படுகளோ இல்லாது இருத்தல்.”

“பாராளுமன்றத்துக்கு பதில் அளிகக்கூடிய பிரதமர் தலைமையிலான அமைச்சரவையினதும் மக்கள் நேரடியாக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியினாலும் கட்டியெழுப்பும் ஆட்சி.

மேல்வரும் பண்புகள் பொருத்துகின்ற அரசாங்க முறைகளைக் குறிப்பிடுக.

1. …………………………………………………………………………………………………….

2. ………………………………………………………………………………………………....

agaram.lk

34) “அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுதல் நோக்கமாக இருத்தல்”
“அரசியல் அதிகாரத்தை கையாளுபவர்கள் மீது செல்வாக்கு செலுத்துவதனூடாத் தனிப்பட்ட நலன்களை மேம்படுத்துவதே பிரதான கரிசனையாகும்.”
மேலே இரு கூற்றுக்களுக்கும் பொருந்தும் ஒழுங்கமைப்புக்களையும் முறையே குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………

35) “ஏதேனும் சமூகத்துக்கு தாங்கள் அனைவருவரும் கூட்டாக இனம் என்கின்ற பாரிய சமூகத்திற்குள் உடன்படுதல் என்ற உணர்வுடன் தொடர்படுவது”
“அரச துறைக்கு சமயத்தின் அழுத்தமோ, சமய துறைக்கு அரசின் அழுத்தங்களே இல்லாமல் இவை இரண்டும் ஒன்றிற்கொண்டு வேறுபட்ட மற்றும் சுயாதீனமாக இரண்டு துறைகளாக கருதப்பட வேண்டும்.”
இப்பண்புகளைக் கொண்ட கருத்தியல்களை முறையே குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………

36) முரண்பாட்டின் செயற்பாட்டுவாத வகைப் படுத்தலின் பிரதான இரு வகைகளையும் குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………

37) இலங்கையில் காலணித்துவ ஆட்சியின் கீழ் இனவாரி பிரதி நிதித்துவத்தை அறிமுகம் செய்ததும் அம்முறையை இல்லாது ஒழித்ததுமான இரு யாப்புத் திருத்தங்களையும் குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………

38) 1948 இல் சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் இரு வழிமுறைகளில் தேர்ந்தடுக்கப்பட்டனர். அவ் இரு வழிமுறைகளையும் குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………

39) 1. 1972 முதலாம் குடியரசின் கீழ் நாம நிர்வாகி நியமிக்கப்பட்ட விதம்,.
2. நாம நிர்வாகியின் பதவிக் காலத்தைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

40) “சர்வதேச நிறுவனங்கள் இரு நிறுவன வகைகளைக் கொண்டுள்ளன” அவ்விரு நிறுவன வகைகளையும் குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………

41) பொதுமக்களின் பிரச்சனைகளின் போது அரசாங்கம் அத்தகைய பிரச்சனைகளை தீர்க்க முறையான அதிகாரங்களைக் கொண்ட நிறுவனங்கள் மூன்று காணப்படுகிறது. அவற்றின் இரண்டைக் குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………

42) தாரள ஜனநாயகத்தின் படி மக்கள் அரசியலில் பங்கேற்கும் விதம் இரண்டு முறைகளில் காணப்படுகிறது. அவ்விரு முறைகளையும் குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………………
2. ……………………………………………………………………………………………

agaram.lk

43) 1. 1978 யாப்பின் கீழ் உருவாக்கப்பட்ட அரசியல் நிர்வாகம் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. அவ்விரு பகுதிகளையும் குறிப்பிடுக.

2. 1978 யாப்பின் படி விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பாக மட்டுமே ஜனாதிபதியை குற்றச் சாட்டுக்கு உட்படுத்த முடியும்" அக்குற்றங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………………

2. ……………………………………………………………………………………………

44) 1978 ஆம் ஆண்டு யாப்பின் கீழ் மக்களின் சட்டவாக்க அதிகாரமானது இருமட்டங்களில் இரு வேறுபட்ட முறைகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அவ்விரு முறைகளையும் குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………………

2. ……………………………………………………………………………………………

45) 1978 ஆண்டு யாப்பின் படி நீதிமன்றத்தின் சுயாதீனமாக பாதுகாக்கும் பொருட்டு அவற்றுக்கான நிபந்தனைகளில் இரண்டைத் தருக.

1. ……………………………………………………………………………………………

2. ……………………………………………………………………………………………

46) 1. இலங்கையில் சிறுகட்சிகள் தோன்ற அடிப்படையாக அமைந்த விடயத்தையும்,

2. இலங்கையில் தற்போது நடைமுறையில் காணப்படும் கட்சி வகைப்படுத்தலையும் குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………………

2. ……………………………………………………………………………………………

47) உலக வலுச்சமநிலைக்கும் மற்றும் பிரசித்தி பெற்றுள்ள உலக முறைமைக்கும் எதிரான போராட்டங்கள் இரண்டு வழிகளில் மேற்கொள்ளப்படும் அவ்விரு வழிகளையும் குறிப்பிடுக.

agaram.lk

1. ……………………………………………………………………………………………

2. ……………………………………………………………………………………………

48) தற்காலத்தில் அரசுகள் வெளிநாட்டு கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் இரண்டு உபாயங்களை தருக.

1. ……………………………………………………………………………………………

2. ……………………………………………………………………………………………

49) "அணி சேரா இயக்கம் தோற்றம் பெற அடிப்படையான நோக்கம் இரு முகாம்களில் இணையாமையாகும்." அவ்விரு முகாம்களையும் குறிப்பிடுக.

1. ……………………………………………………………………………………………

2. ……………………………………………………………………………………………

50) சர்வதேச அரசியலில் தேசிய அதிகாரத்தை கட்டுப்படுத்தும் காரணிகள் இரண்டு தருக.

1. ……………………………………………………………………………………………

2. ……………………………………………………………………………………………

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, யூன் - 2019**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, June - 2019**

FWC

| தரம் :-13 (2019) | அரசியல் விஞ்ஞானம் - II | மூன்று மணித்தியாலம் 10 நிமிடம் |
|---|---|---|

❖ **இவ்வினாப்பத்திரம் மூன்று பகுதிகளைக் கொண்டதாகும் பகுதி I இலிருந்து குறைந்த பட்சம் ஒரு வினாவையும் பகுதி II இலிருந்து குறைந்தபட்சம் இரண்டு வினாக்களையும் பகுதி III இலிருந்து ஒரு வினாவையும் தெரிவு செய்து எல்லாமாக (5) வினாக்களுக்கு விடை தருக.**

**பகுதி I**

1) அரசியலிருந்து அரசறிவியலை நீர் எவ்வாறு வேறுபடுத்துவீர்? ஆராய்க. (20 புள்ளிகள்)

2) பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டு பற்றி ஆராய்க.
   I) அரசியல் கட்சிமுறை
   II) அரசும் அரசாங்கமும்
   III) சமூக ஜனநாயக வாதம்.
   IV) அரசியல் பொருளியல் அணுகுமுறை (2x10 = 20 புள்ளிகள்)

3) பின்வரும் எவையேனும் இரண்டு பற்றி பரிசீலிக்குக.
   I) அரசு மாதிரிகள்
   II) கலாணித்துவ அரசு
   III) தாராண்மைவாதம் அரசு பண்புகள்
   V) அனைத்தாண்மை அரசின் பண்புகள். (2 x 10 = 20 புள்ளிகள்)

agaram.lk

**பகுதி II**

4) இலங்கையில் பிரித்தானிய கலாணித்துவ ஆட்சியின் கீழ் அரசியல் பொருளாதார சமூக விளைவுகளை ஆராய்க. (20 புள்ளிகள்)

5) 1947 – 1972 வரையான இலங்கையின் அரசியல் அமைப்பின் கீழ் காணப்பட்ட சட்டத்துறையின் அமைப்பையும் இறையாண்மையையும் ஒப்பிடுக? (20 புள்ளிகள்)

6) இலங்கையின் இரண்டாம் குடியரசு அரசியல் அமைப்பின் கீழ் எவையேனும் இரண்டினை பரிசீலிக்குக.
   I) நிறைவேற்றுதுறையும் அரச சேவையும்
   II) ஜனாதிபதி தெரிவு முறை
   III) மத்தி அரசுக்கும் மாகாண சபைக்கு இடையிலான தொடர்பு.
   IV) 19 ஆம் திருத்தம் (2 x 10 = 20 புள்ளிகள்)

7) இலங்கையின் அரசியல் கட்சிமுறையின் பண்புகளையும் அதன் போக்குகளையும் விபரிக்குக.

(20 புள்ளிகள்)

## பகுதி III

8) தாராள ஜனநாயக ஆட்சி முறையின் இயல்புகளை கருத்துரைக்குக. (20 புள்ளிகள்)

9) பின்வருவனவற்றில் இரண்டினை ஆராய்க.

I) மோதல் நிலைமாற்றம்

II) மோதல் இணக்கப்பாட்டு ஊடகங்கள்

V) முரண்பாட்டு தீர்வு செயன்முறை (2x10 = 20 புள்ளிகள்)

10) பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டுக்கு சிறுகுறிப்புகள் எழுதுக.

I) பொதுக் கொள்கையும் சிவில் சமூகமும்.

II) சமகால சர்வதேச அரசியலின் போக்குகள்.

III) ஐக்கிய நாடுகளும் இலங்கையும்.

IV) உலக அரசியலில் செயற்பாட்டாளர்கள்.

(2x10 = 20 புள்ளிகள்)

agaram.lk